சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.108/2022</u>

20.08.2025

வா.சா.2 திரு.மேகராஜ், த/பெ. ராஜகோபால்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சியமளிக்க வாதி சதானந்தம் அழைத்துவந்தார். நான் எப்போதும் நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருப்பேன் என்றாலும் அங்கு எழுதப்படும் ஆவணங்களில் சாட்சி கையொப்பம் போடுவதை வழக்கமாக வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புல எண்ணும், விஸ்தீரணமும் தெரியாது. வாதி ரெங்கசாமியிடம் சொத்தை வாங்கியதாக சொல்லியுள்ளேன். அதே ரெங்கசாமியிடம் பிரதிவாதி 1973 ல் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை 1970 ஆம் வருடத்தில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அப்போது பிரதிவாதி சரவணன் கூரை வீடு கட்டி வசித்து வந்தார். அந்தகூரை வீட்டை இடித்துவிட்டு மாடி வீடு கட்டி குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் சகோதரர் தான் வாதி என்றால் சரிதான். பிரதிவாதி 21.10.1985 ல் 2 சென்ட் நிலம் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். 1 சதுர மீட்டருக்கு எத்தனை சதுரடி என்று எனக்கு தெரியாது. 200 சதுர மீட்டர் எத்தனை குழி என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தை எந்த தேதியில் ஆக்கிரமித்தார் என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே கட்டியிருந்த கூரை வீட்டை இடித்து விட்டு பக்கத்து இடத்தில் மாடி வீடு கட்டிவிட்டார். நான் நன்னிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சாட்சி கையொப்பம் செய்யும் வேலையை செய்து வருவதால் இந்த சாட்சிக்கும் சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.